Drinking water-supply in Theni firka

* 472 *Q.*—SRI N. R. THIAGARAJAN : கனம் ரெவினியூ அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

மதுரை ஜில்லா, பெரியகுளம் தாலூகா, தேனீ தொகுதியில், ஸ்ரீரங்கபுரம், பாலகிருஷ்ணபுரம், அம்பாசமுத்திரம் ஆகிய ஊர்களுக்கு குடி தண்ணீர் பம்பு வைக்க கோரிக்கை ஏதேனும் வந்ததுண்டா? அப்படியானால் அது எப்பொழுது நிறைவேற்றப்படும்.?

THE HON. SRI M. A. MANICKAVELU : Yes, Sir. Estimates for the construction of overhead tanks in the villages are under technical scrutiny.

SRI N. R. THIAGARAJAN : ஸார், சென்ற 18 மாதங்களாக, 3 திட்டங்கள் மாத்திரமல்லாமல், 30 திட்டங்கள் கலெக்டர் ஆபீஸில் கவனிக்கப்படாமல் இருக்கின்றன. அவைகளைச் சீக்கிரமாக அனுப்பும்படி கலெக்டருக்கு எழுதி உடனடியாக நடவடிக்கை எடுக்க முடியுமா? தமிழகத்தில் மொத்தம் 27 லட்சம் ரூபாயில், மதுரை ஜில்லாவிற்கு 53 ஆயிரம் ரூபாய் தான் செலவழிக்கப்பட்டிருக்கிறது. இனியாவது சீக்கிரமாகச் செய்ய வேண்டுமென்று உத்திரவு போடுவார்களா?

THE HON. SRI M. A. MANICKAVELU : ஏற்கெனவேயே கலெக்டர் இதைப்பற்றி வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார். ஸ்ரீரங்கபுரத்திற்கு 28,000 ரூபாய்க்கு டெக்னிகல் ஸேங்ஷன் அனுப்பப்பட்டிருக்கிறது. பாலகிருஷ்ணபுரத்திற்கு அஸிஸ்டெண்ட் என்ஜினீயரை எஸ்டிமேட் போடச் சொல்லியிருக்கிறோம். அம்பாசமுத்திரத்திற்கு 23,000 ரூபாய்க்கு எஸ்டிமேட் போடப்பட்டு எடுத்துக்கொள்ள பிரயத்தனப்படுகிறது.

Dam across Vaipparu in Sattur taluk

* 473 *Q.*—SRI N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether there is any proposal to construct a dam across Vaipparu in Sattur, Ramanathapuram district?

THE HON. SRI P. KAKKAN : No, Sir.

SRI N. R. THIAGARAJAN : தமிழகத்திலே ஒரு பெரிய நதியாகிய வைப்பாறு சமுத்திரத்தில் போகிறது. இந்த ஆற்றின் மீது அணை கட்டுவதைப்பற்றி பரிசீலனை செய்து திட்டத்தை நிறைவேற்றுவார்களா?

THE HON. SRI P. KAKKAN : இந்த வைப்பாற்றின் குறுக்கே அணை கட்டுவதைப்பற்றி பரிசீலனை செய்யப்பட்டிருக்கிறது. கண்மாய், குளங்கள் மூலமாக எவ்வளவு தண்ணீர் கொடுக்கமுடியும் என்று பார்த்திருக்கிறார்கள். அப்படிப் பார்த்ததில், 1941–44-லிலும், 1951–52-லும் தண்ணீர் வந்ததைப் பார்த்தபோது மிகவும் குறைவாக இருந்ததால் திட்டத்தை எடுத்துக்கொள்ளவில்லை. கண்மாய், குளங்கள் மூலமாகத் தண்ணீர் கொடுப்பதற்கு 3 லட்சம் ரூபாய்க்கு ஒரு திட்டம் தயார் செய்யப்பட்டது. அதனால் 150 ஏக்கருக்குத்தான் தண்ணீர் பாயலாம் என்று முடிவு செய்திருக்கிறார்கள். அதுவும் செலவு அதிகப்படியாக ஆவதினால் பரிசீலனை செய்து கைவிடப்பட்டது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

Darangadhara Chemical Works

* 474 *Q.*—SRI M. S. SELVARAJAN : Will the Hon. the
9-20 a.m. Minister for Electricity be pleased to state—

(*a*) whether any representation has been made for the supply of electricity to the Darangadhara Chemical Works that is to be established in the Tirunelveli district; and

(*b*) the details of the action taken thereon?